




# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை – 600 014

தொலைப்பேசி : 044 – 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 01.03.2023

## தலைமைக் கழக அறிவிப்பு

**மார்ச் 8-ல் மகளிர் தின விழா கொண்டாட்டம் :**
**சென்னை தலைமைக் கழகத்தில்**
**கழகப் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் பங்கேற்கிறார்கள்!**

**நம் சமூகத்தில் தாயாக, சகோதரியாக, தோழியாக, மனைவியாக, மகளாக நீக்கமற நிறைந்திருக்கும் பெண்களைப் பெருமைப்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் தேதி மகளிர் தின விழா கொண்டாடப்படுகிறது.**

இதையொட்டி பெண்குலத்திற்கு பெருமை சேர்த்த பெருந்தலைவி, **ஒவ்வொரு கணமும் நம்மை இயக்கிக் கொண்டிருக்கும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருப்பெயரைத் தாங்கியிருக்கிற அம்மா மக்கள் முன்னேற்றக் கழக மகளிர் அணி சார்பில் மகளிர் தின விழா கொண்டாடப்படுகிறது.**

**மார்ச் 8ஆம் தேதி புதன்கிழமை காலை 10 மணியளவில்** சென்னை ராயப்பேட்டையில் உள்ள **தலைமைக் கழக அலுவலகத்தில்** நடைபெறும் மகளிர் தின விழாவில் **கழகப் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன்** அவர்கள் கலந்து கொண்டு **சிறப்புரையாற்றவிருக்கிறார்.**

இந்நிகழ்வில் தலைமைக் கழக நிர்வாகிகள், கழக மகளிர் அணி, கழக இளம்பெண்கள் பாசறை, கழக தகவல் தொழில்நுட்ப மகளிர் பிரிவு, தமிழகம் மற்றும் புதுச்சேரியிலுள்ள அனைத்து நிலையிலான மகளிர் நிர்வாகிகளும் பங்கேற்றிடுமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**